விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 2 ஜுலை 10 இதழ் 157
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18-7-1986

## வவனியா - யாழ். வீதி ஊடாக
# 50 பாரிய வாகனங்கள் சகிதம் நடைபவனியாக படையினர்

வவனியா, வியாழன்

வவனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி 50 பாரிய வாகனங்கள் சகிதம் 400க்கு மேற்பட்ட இராணுவத்தினர் நடைபவனியாக வந்துகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை 5 மணிக்கு வவனியா முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் பிற்பகல் ஒரு மணியளவில் ஓமந்தையை அடைந்தனர்.

இவர்களுடன் பொருள்கள டங்கிய லொறிகள் பவுஸர்களும் ஊர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## 150க்கு மேற்பட்ட தமிழர் பலி

— 'அமிர்'

புதுடில்லி ஜுன் 17

கடந்த சனிக்கிழமை தொடக்கம் இன்று வரை 150க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் இலங்கையில் கொல்லப்பட்டுள்ளனா' என்று தமிழர் விடுதலைக்

(5ம் பக்கம் பார்க்க)

## ● நெடுங்கேணியில்
# பஸ் மீது 'ஹெலி' தாக்குதல்
# 15 பயணிகள் பலி; 18 பேர் காயம்

வவனியா, வெள்ளி

**முல்லைத்தீவிலிருந்து வவனியா நோக்கி வந்த வ. பி. போ. ச. பஸ் வண்டி நெடுங்கேணியருகில் ஹெலிகொப்டர் குண்டுத்தாக்குதலுக்கு இலக்கானபோது அதில் பிரயாணம் செய்தவர்களில் சாரதியுட்பட 15பேர் பலியானுர்கள். 18 பேர் படுகாயமடைந்தனர்.**

நேற்று நடந்த மேற்படி சம்பவத்தில் வவனியா - முல்லைத் தீவுப் பாதையில் நெடுங்கேணி அருகில் சென்றுகொண்டிருந்த முல்லைத்தீவு 'டிப்போ'வுக்குச் சொந்தமான பஸ்வண்டி மீது தாழப் பறந்து ஹெலிகொப்டர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம்செய்தும், குண்டுகளைப் பொழிந்தும் தாக்குதலில் ஈடுபட்டிருந்த சமயம் அந்தப் பஸ்வண்டியில் பிரயாணம் செய்தவர்களில் சாரதியுட்பட 15 பேர் பலியானுர்கள். 18க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நெடுங்கேணியருகே சென்று கொண்டிருந்த பஸ் வண்டி, உடைந்த மதகு ஒன்றினருகில் நிறுத்தப்பட்டதாகவும், அவ்வேளையிலேயே ஹெலிகொப்டரின் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் அறியப்படுகிறது.

இச்சம்பவத்தில் பலியான பஸ் சாரதி குருநகரைச் சேர்ந்த ம்மானுவல் [50 வயது] என்பவராவர். [மா]

## விசாரணைக்கென—
# இராணுவம் கூட்டிச்சென்ற பெண் வீடு திரும்பவில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

செட்டிகுளம் புகையிரத நிலைய விடுதியில் தனது சகோதரியுடன் தங்கியிருந்தபோது இராணுவத்தினரால் விசாரணைக்கென கூட்டிச்செல்லப்பட்ட இளம்பெண் இன்னும் வீடு திரும்பவில்லையென்று வவனியா அரசஅதிபருக்கும், வவனியா பிரஜைகள் குழுவுக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது.

அப்புகாரில் கடந்த 12ந்

(5ம் பக்கம் பார்க்க)

# வசாவிளான் தாக்குதலில் 7 ராணுவம் பலி; பலர் காயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

''வசாவிளானில் நேற்று இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினரை எதிர்கொண்டுமக்கள் விடுதலைப்படையினர் தாக்கியதில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர்''என்று ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலைமுன்னணி வெளியிட்டுள்ள

## ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை

அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''வசாவிளான் இராணுவ முகாமிலிருந்து நேற்று நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் வெளியே வந்தனர். இவர்களை தொடர்ந்து முன்னேறவிடாது மக்கள்விடுதலைப் படையினர் எதிர்த்தாக்குதல் நடத்தினர். மக்கள் விடுதலைப்

(5ம் பக்கம் பார்க்க)

## மூதூரில் திகில்சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மூதூரில் தேடுதல் வேட்டையில ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் 40 மேற்பட்ட வீடுகளை எரித்ததாகவும், பல பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிககப்படுகிறது.

மேலும் 60 பேர் துப்பாக்கிச்

(5ம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கான எரிபொருள் நிலயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதிக்கான எரிபொருட்களை விநியோகிப்பதற்கென அனுராதபுரத்தில் புதிய எரிபொருள் நிலயமொன்று அமைக்கப்படவுள்ளது. (ஐ)

## அமைச்சரை சந்திப்பர்

யாழ்ப்பாணம், வெள்ளி

இராணுவ முகாம்களில் அனுமதி பத்திரம் பெறும் முறையை ஆட்சேபித்துள்ள வடபிராந்திய லொறி உரிமையாளர் சங்கத்தினர் தேசிய பந்தோபஸ்த்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியை சந்திப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சந்திப்பு அடுத்த வாரம் நடைபெறும். என எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ். செயலகம் முன்பாக
# ஒரு மணி நேர மறியல் நேற்று நடைபெற்றது

சுண்டுக்குளி, வெள்ளி

1980-ம் ஆண்டுஜுலைமாதம் 300 ரூபா சம்பளஉயர்வுகோரி வேலைநிறுத்தம் செய்த அரச ஊழியர்களின் 6-வது ஆண்டு ஞாபகார்த்ததினத்தை யொட்டி தொழிற்சங்க கூட்டுக் குழுவினுல் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு மணித்தியால மறியல் போராட்டம் யாழ். செயலக முன்பாக நேற்று நண்பகல் 12 மணி முதல் 1 மணி வரை நடைபெற்றது.

சுமார் முந்நூறுக்கும் அதிகமான ஊழியர்கள் கலந்துகொண்ட ஆப்போராட்டத்தில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் ஊழியர்கள் செயலக முன்வாயிலில்

(5 ம் பக்கம் பார்க்க)

## பூநகரி - பள்ளிக்குடாவில்
# ராணுவ அச்சுறுத்தல் 500 மீனவர் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பூநகரி பள்ளிக்குடா கடற்கரைப் பகுதியில் நேற்று துப்பாககிகள், மற்றும் கத்தி, கோடரி, வாள்போன்ற பயங்கர ஆயுதங்களுடன் வந்த இராணுவக்கினர் அப்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த 500க்கு மேற்பட்ட மீனவர்களைப் பயமுறுத்தியதைத் தொடர்ந்து அவர்கள் பீதியடைந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பகுதியில் நடமாடிக்கொண்டிருந்த இராணுவத்தினரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும், அதன் பின்னர் 300ச்கு மேற்பட்ட இராணுவத்தினர் அப்பகுதிக்குள் வந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவ குடும்பங்களைப்

(5ம் பக்கம் பார்க்க)

## வல்வை, பருத்தித்துறை பகுதியில்
# திருமலை அகதிகள் தஞ்சம்

வல்வெட்டித்துறை, வியாழன்

திருமலை மாவட்டத்தில் நடைபெற்றுவரும் இராணுவ ஊர்காவற் படையினரின் அட்டூழியங்களினுல் அப் பகுதிகளில் வசிக்க முடியாத பரிதாபமான நிலையில் 300 குடும்பங்கள் முல்லைத்தீவு வந்து அங்கிருந்து பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களது தேவைகளையுதிருப்பதற்கான ஒழுங்கு வசங்களையும் வல்வை அகதிகள் புனர் வாழ்வு சபையினரும் பருத்தித்துறை அகதிகள் புனர் வாழ்வு சபையினரும் செய்துவருகின்றனர்.

# ஊர்காவல் படைகளின் பயங்கரவாத நடவடிக்கைகள்
## தமிழீழ விடுதலைப் புலிகள் பிரசுரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

எதிரிக்கு ஒப்பாக அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கும் ஊர்காவல் படையினரின் பயங்கரவாதச் செயல்களை தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதென தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியற் குழு விடுத்துள்ள பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதற்காக இந்த ஊர்காவல் படை என்ற தலைப்பில் விடுக்கப்பட்டுள்ள அப் பிரசுரத்தின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு:

''தமிழீழவிடுதலைப்போராட்டம் மக்கள் போராட்டமாகி வரும் இக்கால கட்டத்தில் போராட்டத்தை மழுங்சடிக்க சிறீலங்காஅரசு பல்வேறு சதி முயற்சிகளை மேற் கொண்டு வருகிறது. இச் சதி முயற்சிகளின் ஓர் அங்கமாகவே ஊர்காவற்படை எனும் அமைப்பை உருவாக்கி வருகிறது.

[5 ம் பக்கம் பார்க்க]

# அரி விளம்பரம்

## தேவை

யாழ். நகரில் வளர்ந்துவரும் ஒரு ஹோட்டலுக்கு Stewards —Cooks தேவை. அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வருக. Old Park Chinese Restaurant 207, Old Park Road, Jaffna. C 3470

யாழ். மாவட்டத்திற்குள் சைக்கிளில் சென்று வியாபாரம் செய்யக்கூடியவர்கள் உடன் தேவை. சைக்கிள் வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது. அகதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நவாமினி, K. K. S. றோட், யாழ்ப்பாணம். [C 3515]

கூரைக்குப்போடும் புதிய தட்டோடுகள் உடனடியாகத் தேவை. கையிருப்பிலுள்ளவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும். 120, அரசடி றோட், சுந்தர்மடம். தொலைபேசி: 238,8 [C-3523]

இறைச்சிக்கான கோழிகள் எதுவாய் இருந்தாலும் உடன் தேவை. தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: அண்ணா பாம், செம்மாதெரு; அண்ணா பாம், இணுவில். [A-940]

## விற்பனைக்கு

நல்ல இன ''லவ் பேட்ஸ்'' (Love Birds) விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்: அண்ணா பாம், இணுவில். [A-941]

இறக்குமதி செய்த மீன் சாப்பாடு (Fish Max) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M. G. M. 777, K K S Road, and 208, 1st Cross St. Jaffna. Telephone 22611. (A 920)

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள் தேக்கு அலுமாரிகள், Formica சாப்பாட்டு மேசை, Dressing Table, குக்கர் அவுண் ஹென ஆட், றேடியோ றேப், அயன் சேவ், சுவர் மணிக்கூடு, கட்டில்கள், றாம் பாட்டிசன், செற்றி, எவரிலெவர் விளக்குகள், துணிவகை, இன்னும் பல விற்பனைக்கு உண்டு சி. பத்மநாதன், ''பிறீ''மலிர் சேவிஸ், ஆடியபாதம் வீதி, யாழ் / திருநெல்வேலி வடக்கு. [C-3526]

## சேவை

யாழ் நகரில் தரமான ''போட்டோஸ்றற்'' பிரதிகள் தெளிவான ''றோனியோ'' பிரதிகளைத் திருப்தியான முறையில் பெற்றுக்கொள்ள; சினேன்கட்; 239, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (C 3488)

## வகுப்புகள்

ஆரம்பம்: 20-07-86. ஒளியியல் (88) Sat. and Sun. (1-00 p. m. — 2-00 p. m.). ஆசிரியர்: சௌந்தி B Sc. (Hons). 3-ம் குறுக்குத் தெரு (P M C. முன்பாக), யாழ்ப்பாணம். [C-3521]

## மணப்பந்தல்

தரமுள்ள மணமக்களின் சாதகக் குறிப்புகள் எம்மிடம் உண்டு. 40 வயதுக்கு மேற்பட்ட தபுதாரர், விவாகரத்துச் செய்தோர் குறிப்புகளும் எம்மால் வரவேற்கப்படும். உயர் படிப்பு உத்தியோகம், அந்தணர், கிறிஸ்தவர் முதலானோரும் தொடர்புகொள்ளலாம். (திருமதி) சரோஜ் யோகநாதன், ''பிறீ''மலிர் சேவிஸ். ஆடியபாதம் வீதி, யாழ் / திருநெல்வேலி வடக்கு. [C-3527]

## பிரார்த்தனை

அனைத்து கிறிஸ்தவர்கள் கூடும் ஐக்கிய ஜெபம்;

1986 ஜூலை 19-ம் திகதி காலை 9 00 மணிமுதல் பிற்பகல் 2 00 மணிவரை பரி. யோவான் கல்லூரி மண்டபத்தில் நடக்க விருக்கின்றது.

C 3516 ஜெப சேவை.


## ''குரு வீடியோ சென்ரர்''

தரமான திரைப்படங்களை சிறந்தமுறையில் குறைந்த செலவில் பதிவுசெய்து கொள்ளவும் தரமான பிரதியில் வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும்.

''குரு வீடியோ சென்ரர்''

வாடிக்கையாளர்கட்கு விசேஷ கழிவு உண்டு

விபரங்கள் நேரில்;

## குரு வீடியோ சென்ரர்

180, பருத்தித்துறை வீதி,

(குருநாதர் கோவிலடி) யாழ்ப்பாணம்.

[C 3520] தொலைபேசி: 22779


## கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்குறிப்பிட்ட பொருட்கள் விற்பனைக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் 1736
2. சுவீப்பிங் சீனி 67 கிலோ

முடிவு திகதி 26-07-86.

விண்ணப்பப்பத்திரங்களுக்கும், விபரங்களுக்கும் சங்கவேலைநேரத்தில்தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்.
தென்மராட்சி மேற்கு,
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
1986-07-15. A 938


முற்றிலும் தன்னியக்க இயந்திரங்கள் மூலம் தயாரானது




- தெய்வீகமானது
- உருகாது
- கருகாது
- நெடுநேரம் எரியக்கூடியது
- பிரகாசமானது

(A-768)


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
கணபதிப்பிள்ளை
அன்னப்பிள்ளை
(புங்குடுதீவு-11)

தோற்றம்: 13-02-1914
மறைவு: 19-06-1986
திதி: 19-07-1986

பாலூட்டி வளர்த்து எம்மை பரிதவிக்க விட்டாயே

கண்ணிமைக்கும் நேரத்தில் காலதேவன் கவர்ந்து விட்டானம்மா

எம்மை வாழவைத்த தெய்வமே! எம்மைவிட்டு பிரிந்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது அம்மா!

நாளை [19-07-86] சனிக்கிழமை புங்குடுதீவு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புங்குடுதீவு-9 C 3499

## அகதிகளுக்கு உதவி

சாவகச்சேரி, வியாழன் மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தினர் ரூபா 2000 பெறுமதியான அன்பளிப்புப் பொருட்களை கைதடி அகதிகள் முகாமிற்கு வழங்கியுள்ளனர்.

## சாதனையில் வீழ்வோன் சாகாது வாழ்வோன்!



கதிர்ப்பிள்ளை
பாலசுப்பிரமணியம்
(வேங்கை-மணிமாறன்)
(வல்வெட்டித்துறை)
நிலத்தில் உற்பவம்:
15-04-1954
நீரில் நற்பதம்:
19-06-1986
திதி:
19-07-1986

அரேபிய நாட்டில் ஈராண்டுகள் உழைத்தாய். பிறந்த நாட்டில் கொடுமைகள் கண்டு கொதித்தாய், இளவேலைத் தொடர்ந்து இலட்சிய வழி நடந்தாய்; சோழர் இலச்சினையும் சோராத இலட்சியமும் கொண்ட வேங்கையுடன் உன் இணைத்தாய்!

அனியினர் படகோட்டிலும்; அணிக்கே மெருகூட்டிலும், கடல் விளையாட்டுத்திடல் என்று கொண்டு நீ விளைத்த சாதனைகள் - ஓயாத கடலுடன் உனக்கிருந்த ஒழியாதபோராட்டங்கள் இன்னுயிரான இனத்திற்காக உன்னுயிரைப் பணயம் வைத்து நீ செய்த பயணங்கள் - பயணம்... பயணம்... பயணம் முடிவில்நெடும்பயணம்... கடலில் சஞ்சரிக்கவன் கடலுடன் சங்கமித்து விட்டிருக்கிறாய்! கடலின் அலைகள் மட்டுமா ஓய்வதில்லை...? உன் புதுநானூற்றுப் புகழ் கதைகளுந் தான்!

வெங்களத்தே பதின் மூவருடன் வீழ்ந்தவனே! வீர சொர்க்கம் சேர்ந்தவனே! நகரின் முதல்வர் பிள்ளையாய்ப் பிறந்தாய்! [வல்வை] நகருளோரெல்லாம் அழுதிடப் பிரிந்தாய்!!

சங்குக்கடலில் சமரில் பட்டாய்! சங்கைப் பெற்றாய்!!

சாவேஅற்றாய்!!!

வல்வை ஊரணி தீர்த்தக் கடற்கரையில் நாளை சனிக்கிழமை [19-07-86] நிகழவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கெடுத்து கௌரவிக்க அன்பாளர்கள் அனைவரையும் அன்புரிமை தழுவி அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்,
சகோதரர்கள்,
உறவினர்கள்,
C 3525 நண்பர்கள்.

## றேட்டறிக்கழக பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். றேட்டறிக்கழகம், யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நொக்கவுட் முறையில் நடாத்திவந்த விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு விழா, நாளை சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். றேட்டறிக்கழகம் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டி போன்ற பல விளையாட்டுப் போட்டிகளை நடாத்தியது குறிப்பிடத்தக்கது.

மேற்படி பரிசளிப்புவிழா ஆரம்பமாவதற்கு முன் சென் ஜோன்ஸ் கல்லூரிமைதானத்தில் பெண்களுக்கான கண்காட்சி வலைப்பந்தாட்டம் போட்டியும், ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட கண்காட்சிப்போட்டியும் நடைபெறும். இதைத்தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் ஆரம்பமாகும்.

இவ்வைபவங்களுக்கான சகல ஏற்பாடுகளையும், யாழ் றேட்டறிக்கழக காரியதரிசி டாக்டர் ரி விஜயசூரியர் மேற்கொண்டுள்ளார். (வி)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



சின்னத்துரை
அருள்நாதன்
(தேவன்)

ஆண்டவன் படைப்பு:
26-12-1945

ஆள்பவன் அழிப்பு:
04-06-1986

எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காய் எமக்கு நல்வழிகாட்டி அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை வாழவைத்த தெய்வமே! எம் நெஞ்சில் நிலைவுள்ளவரை நாங்கள் நினைத்திருப்போம். உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை மன்றாடுகின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் எம்முடன் பங்குகொண்டு எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் நாம் சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றோம்.

மனைவி, மக்கள்,
பெற்றோர், மாமன்,
சகோதரர்கள்,
சகோதரிகள்,
மச்சான்மார்,
மச்சாள்மார்.

''தமிழகம்'',
சிவகுல வீதி,
தெற்கு உரும்பிராய். [C-3530]

உலகச் செய்திகள்

பஞ்சாப் தீவிரவாதிகள்————

# "பாகிஸ்தானில் பயிற்சிபெற்றமைக்கு சான்றுகள் உள்ளன"

## ராஜீவ் காந்தி குற்றச்சாட்டு

புதுடில்லி. ஜூலை 17

பஞ்சாப்பின் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் பயிற்சியளிப்பது குறித்து அதிகசான்றுகள் இந்தியாவிற்கு கிடைத்திருப்பதாக இந்திய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

நேற்று புதுடில்லியில் நடைபெற்ற பாராளுமன்றின் எதிர்க்கட்சிகள் மற்றும் குழுக்களின் தலைவர்கள் கூட்டத்தில் திரு ராஜீவ் காந்தி இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து விபரங்களை வெளியிடுவது இப்போது உகந்ததாக இல்லை என்றும் பாகிஸ்தானில் பயிற்சி முகாம்கள் இருப்பது பற்றிய விபரங்களை அந் நாட்டிற்கு இந்தியா கொடுத்திருந்தும் கூட ஸியா அரசு அதனை மறுத்திருக்கிறது என்றும் தெரிவித்தார்.

'காமன்வெல்த்' விளையாட்டுக்களிலிருந்து இந்தியா விலகிக்கொள்ள வேண்டும் என்று எதிர்கட்சித்தலைவர்கள் கருத்து தெரிவித்த பொழுது இதுகுறித்து ஆபிரிக்க நாடுகளின் முடிவை தான் எதிர்பார்த்திருப்பதாக திரு. ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

---

ஆயுதக்கட்டுப்பாடு:

# அமெரிக்காவும்சோவியத்தும் பேச்சுக்குத் தயார்!

லண்டன், ஜூலை 17

ஆயுதக்கட்டுப்பாடு சம்பந்தமாக புதிய பேச்சுக்கள் நடத்தப்போவதாக அமெரிக்காவும் சோவியத் யூனியனும் அறிவித்துள்ளன.

அணு ஆயுத பரிசோதனைக்கு தடைவிதிப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தும் நடத்த அமெரிக்கா இணங்கியிருப்பதாக பிரிட்டனுக்கு விஜயம செய்துள்ள சோவியத் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவர் இந்த தகவலைத் தெரிவித்த சிறிது நேரத்தில் அணு ஆயுதங்களை மட்டுப்படுத்தும் ஒப்பந்தம் பற்றி பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்க சோவியத் அதிகாரிகள் சந்திப்பார்கள் என்று வெள்ளைமாளிகை அறிவித்தது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் இம்மாதம் 23ம் திகதி ஆரம்பமாகும் என்றுவெள்ளைமாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (து)

---

# சீனா நிராகரித்தது

பீக்கிங், ஜூலை 17

இந்திய எல்லைக்குள் சீன துருப்புக்கள் ஊடுருவல் செய்திருப்பதாக சீனாமீது இந்தியா தெரிவித்த குற்றச்சாட்டை சீனா நிராகரித்துள்ளது.

இந்திய துருப்புக்கள்தான் சீன எல்லைக்குள் ஊடுருவல் செய்திருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

---

# அ. தி. மு. க. தலைவர்

சென்னை வியாழன்

அனைத்திந்திய அண்ணா தி மு க நாடாளுமன்றக் கட்சிக்கு திரு. பி குழந்தை வேலு தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

---

அடம்பனில்————

# ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 10 முஸ்லிம்கள் பலி!

வவனியா, வியாழன்

மன்னார் மாவட்டத்திலுள்ள அடம்பன், நெடுங்கண்டல் ஆகிய கிராமங்களில் இடம்பெற்ற ஆயுதப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் ஒரு முஸ்லிம் குடும்பத்தைச்சேர்ந்த 10பேர் பலியானார்கள்.

தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தை ஒன்றும் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானது

கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்குறிப்பிட்ட கிராமக்களைச் சுற்றி வளைத்து ஆயுதப்படையினர் வீடுகளுக்குள்புகுந்து துப்பாக்கிப் பிரயோகம்செய்தது தெரிந்ததே.

நேற்று இப்பகுதிகளிலிருந்து வவனியா மாவட்டத்திற்கு அகதிகளாக வந்தசிலர் மேற்குறுப்பிட்ட பயங்கர தகவல்களைத் தெரிவித்தனர்.

பொதுமக்களில் 50 பேருக்கு மேல் துப்பாக்கிச் சூட்டுச்குப் பலியானதாகவும், பல வாகனங்கள் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (மா)

---

# "இந்துபாட புத்தகங்களின்றி மாணவர் அவதியுறுகின்றனர்"

கிளிநொச்சி, வியாழன்

"'இந்து மாணவர் நன்மை கருதி சைவநூல்களை அரசினர் வெளியிடுவது மிகவும் குறைவாகும். இந்த நிலையில் சைவத்தைக் கற்கும் மாணவர்கள்பெரும் கஷ்டநிலைக்காளாகின்றனர்".

இவ்வாறு ஆசிரியர் திரு த. நாகேஸ்ரவனின் சைவநூல் வெளியீட்டுவிழாவில் பிரதம விருந்தினராககலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் இளைஞர் சேவை அதிகாரி கு. பரராசசேகரம் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி சரஸ்வதிபூங்காவில் இந்தநூல் வெளியீட்டு விழா இந்து இளைஞர்மன்ற ஆதரவுடன் நடைபெற்றது. நூலின்முதற் பிரதியை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை பிரதிநிதியும் பத்திரிகையாளருமான கே. சிவசங்கரன் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

ஆசிரியர் கே. எம் மனோகரன் வெளியீட்டுரை நிகழ்த்தினார். சரசாலை இந்துஇளைஞர் மன்றத்தலைவர் கு. ஞானேஸ்வரன் விமர்சன உரையாற்றினார். நூலாசிரியர்த. நாகேஸ்வரன் பதிலுரையாற்றினார்.

---

இலங்கை அரசு——

# நிலக்குடியேற்றயோசனைகளை திருத்த இணக்கம்?

சென்னை, ஜூலை17

நிலக்குடியேற்றம் சம்பந்தமானசிலயோசனைகளை திருத்தியமைக்க இலங்கையரசு இணங்கியுள்ளதென இங்குவெளியாகியுள்ள செய்திகள் கூறுகின்றன.

தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும், காணி அபிவிருத்தியமைச்சர் திரு காமினி திசநாயக்காவிற்குப் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையையடுத்தே இலங்கையரசு இவ்வாறு முடிவெடுத்தது

இனப்பிரச்னைக்கு முடிவு காண்பதற்கு நிலக்குடியேற்றம் சம்பந்தமான அரசு தெரிவித்துள்ள யோசனைகள் அடங்கிய 'சி' அட்டவணையில் குறிப்பிட்ட விடயங்கள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி திரு. காமினி திசநாயக்காவுடன் இரு மணிநேரம் பேச்சு நடத்தியது.

இந்தப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் சிலயோசனைகளை மாற்றியமைப்பதற்கு வசதியாக மேற்கொண்டு பேச்சுவார்த்தை ஒத்திப் போடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (து)

---

# பாகிஸ்தான்மீது அமெரிக்க அதிபர் எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூலை 17

இஸ்லாமாபாத் அணுகுண்டு ஒன்றைத் தயாரிக்குமானல் அமெரிக்காவின் இராணுவ மற்றும் பொருளாதார உதவிகள் நிறுத்தப்படும் என்று பாகிஸ்தானை அமெரிக்க அதிபர் திரு ரொனல்ட் ரீகன் எச்சரித்துள்ளார்.

வாஷிங்டன் சென்றுள்ள பாகிஸ்தான் பிரதமர் திரு, மொகமட்ஹான் ஜூனேஜோடம் திரு ரீகன் இவ்வாறான எச்சரிக்கை ஒன்றை விடுத்ததாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரு நாட்டுத் தலைவர்களும் வாஷிங்டனில் ஒரு மணி நேரம் சந்தித்துப்பேசினார்கள்.

முன்னதாக அதிபர் மாளிகையில் பாகிஸ்தான் பிரதமரை வரவேற்றுப் பேசிய திரு ரீகன் பாகிஸ்தானின் இராணுவத்தை நவீன மாக்கவும் அதன் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அமெரிக்கா தொடர்ந்து உதவியளிக்கும் என்று உறுதி கூறினார் (து)

---

# மாதர் சங்கத்திற்கு நிதி உதவி

மண்டைதீவு வியா.

உலக தரிசன நிதுநிறுவனத்தால் மண்டைதீவு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 12 500 ரூபா நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது.

மண்டைதீவு மாதர்சங்க அங்கத்தவர்களில் 21 பேருக்கு இந்நிதி வேலனை உதவி அரசாங்க அதிபர் செல் மைதிலி சோமசுந்தரத்தினால் வழங்கப் பட்டது.

---

# பெறுமதிகூடிய முத்திரைகள் இல்லை

நெல்லியடி, வியாழன்

வடமராட்சிப் பகுதியில் உள்ள பிரதான தபால்கந்தோர்களிலும் உப தபால்நிலையங்களிலும பெறுமதிகூடிய முத்திரைகள் கிடைப்பதில்லை. இதனால் நீதிமன்ற தொழில்கள், நொத்தாரிஸ் மாரின் வேலைகள் ஆகியன தடைப்படுகின்றன.

போக்குவரத்துச் சீர்குலைவு காரணமாக வெளியூர்களிலுள்ள தபால் நிலையங்களிலிருந்தும் முத்திரைகள் பெறமுடியாத நிலைமை உருவாகியுள்ளது. பெருந்தொகையான முத்திரைகள் கொண்டுவரவும் பலர் தயங்குகிறார்கள்.

---

இன்றைய சூழ்நிலையிலும்——

# "மாணவர் தமது கல்வியை தொடரவேண்டும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

"நாட்டின் கஷ்டமான சூழ்நிலையிலும் மாணவர் தமது கல்வியை இடைவிடாது தொடரவேண்டும் நற்பிரஜைகளாக மாணவர் விளங்ககல்வி வழிசெய்கிறது இத்தகைய பொருட்காட்சிகளை ஒழுங்கு செய்தல், செயல்முறைக் கல்விக்கு வழிவகுக்கும்"

இவ்வாறு இடைக்காடு மகாவிததியாலயத்தில்நடைபெற்ற கல்விப் பொருட்காட்சியை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் பிரதம கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. பொ. பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கல்வி அதிகாரிதிரு. ஆ. வ. தங்கராசா அவர்கள் மங்கள விளக்கேற்றினார்கள்.

திரு. ஆ. வ. தங்கராசா அவர்கள் தமது உரையில், "இடைக்காடு மகாவித்தியாலயம் கிராமப்புறத்தில் அமைந்து விளங்கினாலும் கேட்பாய் வட்டாரத்தில் சிறந்த பாடசாலையாகத் திகழ்வது பாராட்டிற்குரியது" என்று கூறினார்.

---

# கம்பன் கழகத்துக்கு நிதிஉதவி

வட்டுக்கோட்டை, வியா

கொக்குவில் சாயி துர்க்கா ஆலய தருமகத்தா சபையினர் நிதிஉதவி ஒன்றை வழங்கியுள்ளளர் சமயம், இலக்கியம் என்பவற்றைப் பேணும் கழகங்களில் ஒன்றான அகில இலங்கைக் கம்பன் கழகக் கோட்டத்தின் கட்டிட நிதிக்காகவே இந்நிதி [ஆயிரத்தொருரூபா] அன்பளிப்புச் செய்யப்பட்டது.

மேற்படி ஆலயத்தில் நடைபெற்ற விழாவொன்றில் அமைப்பாளர் திரு. இ. ஜெயராசா கலந்துகொண்டு உரையாற்றுகையில் இந் நிதி கையளிக்கப்பட்டது.

---

# மின்பாவனையாளர் சங்கம்

சுழிபுரம், வியா.

மின்பாவனையாளர் சங்கம் ஒன்று சுழிபுரம் பகுதியில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது நிரந்தரமான மின் பாவனையாளர்கள் சட்டவிரோத மின் பாவனையால் பெரும்கஷ்டத்திற்கு உள்ளாவதை தடுக்க இச்சங்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

---

# மீண்டும் இயங்கவைக்க முயற்சி

கிளிநொச்சி, வியாழன்

கடந்த ஒன்றரை மாதகாலமாக இயங்க முடியாத நிலையில் மூடப்பட்டுக் கிடக்கும் கிளிநொச்சி இ. போ. ச. டிப்போவை பிரஜைகள் குழு அத்தியாவசியக்குழு முதலானவற்றின் வேண்டுதலையடுத்து இயக்கவைக்க வடபிராந்திய இ. போ. ச. அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கிளிநொச்சிக்கு அப்பால் வட்டக்கச்சி இராமநாதபுரம், அக்கராயன்குளம் வன்னேரிக்குளம், முல்லைத்தீவு, துணுக்காய், வவனியா முதலான இடங்களுக்கு கிளிநொச்சி டிப்போவின் பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுத்து வருவதாக கிளிநொச்சி டிப்போ அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்

கடந்த மாதம் 4ம் திகதி இந்த டிப்போவில் கடமையிலிருந்த உயர் அதிகாரியொருவர் இராணுவத்தால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்தும் கிளிநொச்சி சம்பவங்களை அடுத்தும் பிரஸ்தாப டிப்போ ஸ்தம்பித்த நிலையை அடைந்தது தெரிந்ததே.

---

# மக்கள் பதற்றம்

மாவிட்டபுரம், வியா

பலாலி - காங்கேசன்துறை வீதி தினமும் இராணுவத்தினரின் நடமாட்டத்திற்கு உட்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் பதற்றமடைந்துள்ளனர்.

மேற்படி வீதியால் தற்போது இராணுவத்தினர் அடிக்கடி காங்கேசன்துறை வந்து போகின்றனர் ஆப்பகுதி வீட்டு வளவுகள் ஊடாகவும் வேலிகள் வெட்டியும் வந்து போகும் இராணுவத்தினரால் அப்பகுதி மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அடிக்கடி அவர்கள் வரும் போது அவ்வீதி வெறிச்சோடிக் காணப்படுவதுடன் மக்களும் பாதுகாப்புத்தேடி இடம் பெயர்கின்றனர்.

### மணிவாக்கு

ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போது மற்றவர்களுடன் சம வாய்ப்பு உரிமையுடனேயே பிறக்கிறான். அவனுக்கு அந்தவாய்ப்பபை மறுக்கும் சமுதாய சமூகக் கட்டுத்திட்டங்கள் உடைத்தெறியப்பட வேண்டும்.

—ஓர் அறிஞர்

## நமது நோக்கு

# இங்கும் அங்கும்

தென் இலங்கையில் அரசியல்வாதிகளானால் என்ன, மக்கள் தொடர்பு சாதனப் பிரதிநிதிகள் ஆனால் என்ன, வடக்கு கிழக்கில் இன்று நிலவும் அசாதாரண நிலைமைகள் பற்றிய பேச்சு எழுந்தால் சிங்கள அப்பாவி மக்கள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டது பற்றியும், சிங்களவர்கள் அகதிளாக்கப்பட்டிருப்பது பத்றியும் மட்டுமே மிகுந்த அக்கறையுடன் பேசுகிறார்கள்- கவலைப் படுகிறார்கள். நிவாரணங்களுக்கும் ஓடி ஓடி ஏற்பாடு செய்கிறார்கள். அவ்வாறான செய்திகளுக்கும் மிக விரிவான பிரசாரமும் கிடைக்கின்றது

அதே வேளை வடக்குக் கிழக்கில் ஆயுதப்படையினர் தீவிரவாதிகளை தேடுவதாகக் கூறிக்கொண்டு சாதாரண அப்பாவித் தமிழ் மக்களை தினசரி கொன்று குவித்து வருவது இவர்களுக்குத் தெரிவதில்லை. தெரிந்தாலும் அக்கறைப்படுத்திக் கொள்வதில்லை. கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராகி விடுகின்றனர்.

கடைசியாகக் கிடைத்துள்ள ஒரு செய்தியின்படி மூதூர் பகுதியில் 22 அகதிகள் உட்பட 50பேருக்கு மேல் பொதுமக்கள் ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தமிழ்ப்பகுதிகளில் இருப்பவர்கள் எல்லாருமே பயங்கரவாதிகள் போலவும், அவர்களைக் கொல்வது சாதாரணமாக நடந்தேற வேண்டிய சம்பவங்கள் போலவும் கருதப்படுகின்றது.

இப்படிக் கூறும்போது சிங்கள அப்பாவி மக்கள் கொல்வப்படுவதை நாம் நியாயப்படுத்துவதாகாது.

வடக்கு கிழக்கில் ஆயுதப் படையினர் நடத்தும் அட்டூழியங்கள் பற்றிய விபரங்கள் தென்னிலங்கைப்த்திரிகைகளில் வெளியிடப்படுவதில்லை. வெளியிடப்படுபவையும் ''லங்காபுவத்'' தினால் திரிக்கப்பட்ட செய்திகளாகவே இருக்கின்றன. 'லங்காபுவத்' செய்தி முகவர் ஸ்தாபனத்தைச் சேர்ந்த எந்த ஒரு பிரதிநிதியும் வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்கு வருவதில்லை. வந்தாலும் சாதாரண மக்கள் வதியும் பகுதிகளுக்குச்சென்று சம்பவங்களை நேரில் கண்டறிவதில்லை. எனவே அரசச் சார்பு அறிக்கைகள், அதிகாரிகள் கொடுக்கும் தகவல்களைக் கொண்டு இப்பகுதி நிலைமைகளையும், சம்பவங்களையும் தாம் நேரில் கண்டு சொல்வதுபோல் வெளியிடுகிறார்கள். எனவே தென் பகுதிமக்களுக்கு ஒருபக்கத் தகவல்கள்மட்டுமே கிடைக்கின்றன அவர்களும் அவைகளை நம்பவேண்டியிருக்கிறன்து.

மண்டைதீவுக் கடலில் மீன் பிடிக்கச்சென்ற நிராயுதபாணிகளான 30க்கு மேற்பட்ட அப்பாவி மீனவர்கள் துடிக்கத்துடிக்கபடு கொலைசெய்யப்பட்ட சம்பவம் கொழும்புப் பத்திரிகைகளிலும், ஏனைய தொடர்பு சாதனங்களிலும் உடனடியாக வெளியிடப்பட வில்லை. இருதினங்கள் கழித்து மண்டைதீவுமுகாமை தீவிரவாதிகள் தாக்கியபோது நடந்தசண்டையில் இடைநடுவில் சிக்கிய பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டதாக 'லங்காபுவத்' அறிவித்தது.

இதேபோல்தான் யாழ்ப்பாணத்திலும் ஏனைய நகரங்களிலும் விமானங்கள் குண்டுமாரி பொழிந்தபோது அங்குள்ள மக்களுக்கு அவைபற்றிய விபரம் சரியாகக்கிடைக்கவில்லை.

தோலகட்டி செபமாலைதாசர் ஆச்சிரமத்தில் சங்கைக்குரிய சகோதரர் ஒருவர் எப்படிக் கொல்லப்பட்டார் என்பது பற்றி நேரில் கண்டவர்களே விசாரணைகளில் சாட்சியம் கூறியிருக்கிறார்கள். ஆனால் ராணுவத்துக்குத் தகவல் கொடுத்தாரென்று தீவிரவாதிகள் அவரைச் சுட்டுக்கொன்றதாக 'லங்காபுவத்' கூறியது. இம் மாதிரிச் சம்பவங்களை நேரில் பார்த்து அனுபவிக்கும் மக்கள் ''எமக்கென்று ஒரு அரசு இல்லையே'' என்று ஏங்குவது இயற்கையல்லவா?

இயலாத நிலையில்தான் உலகசமுதாயமாவது இதை உணரட்டுமென்று இப்பகுதி சமயத் தலைவர்களிலொருவரான யாழ். ஆயர் அதிவண தியோகுப்பிள்ளை அவர்கள் ஐ நா. விடம் முறையிடவேண்டுமெனஒரு கருத்தை வெளியிட்டார்.

இங்கு நடப்பவை பற்றி ஒன்றும் அறியாத கொழும்புப் பிரமுகர்கள் 'குய்யோ முறையோ' என்று குரலெழுப்பினர். பத்திரிகைகளும் பத்தி பத்தியாக கட்டுரை வரைந்தன.

ஒரு வகையில் அதுவும் நல்லதுதான் யாழ். ஆயர் அவர்கள் அவ்வாறான கருத்தொன்றை வெளியிடுவதற்கான சூழ்நிலை ஏன் ஏற்பட்டது?

சமயபீடங்களும், அறிவு சார்ந்த அமைப்புக்களும் அக்கறையுள்ள அரசியல் வாதிகளும் இதை அறிந்துகொள்ள முற்பட்டுள்ளார்கள்.

அமைதி விரும்பும் தமிழ் மக்களின் இன்றைய இக்கட்டான நிலையை ஐ நா. போகாமலே உலகம் உணர்ந்துகொள்ள இது உதவும் என்று நம்புவோம்.

### நாளை

யாழ்ப்பாணம் வெள்ளி யாழ்.பட்டப்படிப்புகள் கல்லூரி தயாரித்தளிக்கும் இ முருகையனின் வெறியாட்டு நாடகம் 19ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் சுண்டிக்குழி மகளிர் கல்லூரியில் மேடையேறஇருக்கிறது. (ஐ)

## 1190-ம் ஆண்டு உருவான——

# அராலித்துறைப் பாதை

# இன்று மக்களுக்கு பெரிதும் உதவுகிறது

### –உதவி திட்டமிடல் பணிப்பாளர்

[வி.கே.திருலோகமூர்த்தி]

1190ம் ஆண்டு தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்திற்கென உருவான அராலித்துறைப்பாதை இன்று இம் மக்களுக்கு பயன்பட்டுள்ளது. தீவுப்பகுதியில் மணியகாரனாக இருந்த முத்தையா என்பவரால் 1909ம்ஆண்டு அராலித்துறைப்பாலம் அமைக்கப்பட்டது. தீவுப்பகுதி மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடியை தீர்ப்பதற்கு அராலிப்பாலத்தின் இருமருங்கையும் புனரமைத்து மக்களுக்கு வசதி செய்யவேண்டிய அவசியம் வந்துள்ளது.

தீவுப்பகுதியின் இன்றைய நெருக்கடி நிலைபற்றி கடந்த வாரம் யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் சிறப்புரையாற்றுகையில் தீவுப் பகுதி தெற்கு முன்னாள் உதவி அரசாங்க அதிபரும் வவனியா மாவட்ட திட்டமிடல் பணிப்பாளருமான திரு ஆ. செந்திவடிவேல் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழகபுவியியல் துறைத் தலைவர் எஸ். பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு செந்திவடிவேல் தொடர்ந்து உரையாற்றியதாவது: பண்ணைத்தாம்போதி இன்றுசெயல் இழந்துள்ளதுபோல் ஊர்காவற்றுறைத்துறைமுக படகுச் சேவையும் செயல் இழந்துள்ளது.

இந்த நிலையில் தீவகமக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகிறார்கள் அனலைதீவு, எழுவதீவு மக்களின் படகுச்சேவையை கருத்தில்கொண்டு நாரந்தனைகிராம சபைப்பகுதியில் உள்ள கண்ணகை அம்மன் கோவிலடி துறை முகத்தை விஸ்தரித்து பாலமமைக்க உடன்நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கமத்தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் கே. பரமலிங்கம் பேசுகையில்: தீவுப் பகுதியின் போக்குவரத்துத் தடையால் 500 ஏக்கர் வெங்காயச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது விதைதானியங்கள், உணவுப்பொருட்கள், உரம் முதலானவை தீவகத்திற்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

மண்டைதீவு மறுமலர்ச்சி மன்றத்தலைவர் திரு சி பாலசிங்கம் பேசுகையில் 'பண்ணைப் போக்குவரத்து தடையாலும் மண்டைதீவுப் பகுதி பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாலும் இக்கிராம மக்களின் கல்வி,தொழில் போக்குவரத்து சுகாதாரம் தபால்சேவை உற்பத்தி அனைத்துமே பாதிப்படைந்துள்ளது அல்லைப்பிட்டி மண்டைதீவுஇணைப்புவீதி உடனடியாக புனரமைக்கப்பட வேண்டும்.

இக்கருத்தரங்கின் அமைப்பாளர்கள் இரா. சிவச்சந்திரன், சு. வில்வரெத்தினம் கா. குகபாலன் ஆகியோரும் கருத்துரைவழங்கினார்கள்.

தீவுப்பகுதி அபிவிருத்திக்கழ்கம் என்ற புதிய அமைப் பொன்றும் அமைக்கப்பட்டது. இதன்தலைவராக எஸ். பாலச்சந்திரன் தெரிவானார்.

## மக்கள் கருத்து

### யாழ் மாநகர சபையின் நூலக சேவை

யாழ். மாநகர சபையின் பொதுசன நூலகத்திற்கு நேர்ந்தகதியும் அதன் பின் மீண்டும் அது புத்துயிர் பெற்றுப் பல இடங்களில் சிறுநூலகங்களாக இயங்கிவருவதும் யாவருமறிவர், இப்போது அவை நல்ல வளர்ர்ச்சி பெற்று வருகின்றன.

ஆணையாளர் சீ வீ. கே. சிவஞானம் அவர்களின் துடிப்பான செயற்பாடுகளும் நூலகர் திருமதி நடராஜாவின் அளப்பரிய ஆர்வமும் நூலக சேவையை நாள்தோறும்படிப்படியாக வளர்த்து வருகின்றன. இதேயளவு ஊக்கமும் உற்சாகமும் வாசகர்கள் மத்தியில் தோன்றாவிடில் இந்த வளர்ச்சியால் பயனெதுவுமில்லை.

புதிதாக வெளிவரும் நூல்களை நேரடியாக அந்த நூலாசிரியர்களுடனேயே தொடர்பு கொண்டு ஒவ்வொரு நூலிலும் பத்துப் பிரதிகளை விலை கொடுத்து வாங்கி நூலக சேவையை விரிவு படுத்துவதுடன் எழுத்தாளர்களையும் ஊக்குவிக்கின்ற மாநகர சபையின் பணி மிகவும் பாராட்டத்தக்கது. இதேபோலப்புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துப் பலருக்கும் வாசிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும் என்ற ஆர்வமும் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

நமதுவாசகர்கள் இந்தவாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக் கொள்ள முன்வரவேண்டும், நீண்ட காலத்துக்கு முன்பு இரவல் பெற்று இன்னமும் திருப்பி ஒப்படைக்கப்படாத நூல்கள் மாநகரசபை நூலகத்திற்கல்ல தமிழ் வாசகர்களாகிய எமக்குத்தான் பேரிழப்பு பழைய நூல்களை மீண்டும் பெறுவதறகு நூலகர்கள் செய்யும் முயற்சிஅளப்பரியது. ஆனால் பயன்? நூல்களை இரவல் பெற்றவர்கள் திரும்பவும் அவற்றைத் திருப்பி ஒப்படைப்பதன் மூலம் பல்லாயிரக்கணக்கான வாசகர்களுக்குப் பேருதவி செய்ய வேண்டுமென்பது எமது வேண்டுகோள்.

— கோப்பாய் சிவம்.

கோப்பாய்.

தென்புலோலி

# உபய கதிர்காம முருகன் அலங்கார உற்சவம்!

தென்புலோலி உபய கதிர்காமத்திலே தான்தோன்றியாக எழுந்தருளிருக்கும் முருகப்பெருமான் பக்தியுடன் தன்னை வணங்கும் பக்த அடியார்களின் துன்பங்களையெல்லாம் நீக்கி அவர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார். இலங்கையின் இரண்டாவது கதிர்காமமெனப் போற்றப்படும் இம்முருகன் ஆலயத்திற்கு தென்னிலங்கை கதிர்காமத்திற்கும், ஆற்றங்கரை முருகனான தொண்டமானாறு செல்வச் சந்நிதிமுருகன் ஆலயத்திற்கும் செலலமுடியாத பெருந்திரளான முருகபக்தர்கள் வந்து தரிசித்தும் அருள் பெற்றும் செல்கின்றனர்.

உபயகதிர்காம ஆலயம் தென் இந்தியாவில் வசித்த பக்தியுள்ள பெண்ணான குகனருட் செல்வி ரீ. எஸ். லோகாம்பாள் கண்ட கனவின் குறிப்பின்படி வட இலங்கையிலே தென்புலோலியிலே கண்டுபிடிக்கப்பட்டது. வல்லிபுரக் கோவில் பகுதி சிங்கை நகரமாக விளங்கிய காலத்திலோ அல்லது அதற்கு முன்னரோ இது ஆலயமாய் விளங்கியிருப்பது ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எவராலும் வரையப்படாது வெண் கல் மலையில்தானே அமைந்துகாணப்படும் சுயம்புலிங்கத்தையுடைய முருகப் பெருமான் தனிப்பெருஞ் சிறப்புப் பொருந்தியவர் இங்கு சக்கரத்தின் வலப்பாகத்தில் காணப்படும் மூனைகளையடுத்து விநாயகரையும், சிவம் சக்திகளையும் குறிக்கும் அட்சரங்கள் அமைந்திருப்பதனால் அத்தெய்வங்களுக்கும் எக்காலமும் பூசனைகள் நடைபெற்றுவருகின்றன.

இம் முருகனின் அலங்கார உற்சவம் கடந்த 7-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. 19 ம் திகதி வேட்டைத் திருவிழாவும், 20 ம் திகதி சப்பறத் திருவிழாவும் நடைபெற்று 22 ம் திகதி திருவோண நட்சத்திரம் பொருநதிவரும் வேளையிலே இம்முருகனுக்கென விசேட முறையில் நிர்மாணிக்கப்பட்ட தீர்த்தக்கேணியில் முருகப் பெருமான் தீர்த்தமாடுவார். மறுநாள் விளாத்திமடை நடைபெறும் இவ் உற்சவ காலங்களில் எம்பெருமான் சந்நிதானத்திற்குச் சென்று கிடைத்தற்கரிய இவ் ஆலய வழிபாடுகளில் ஈடுபட்டு பேரின்பம் பெறுவோமாக.

ஏ.என்.எஸ்.திருச்செல்வம்.

### கோப்பாய் பாலம்ஊடாக பயணம்

சாவகச்சேரி, வியா

சாவகச்சேரியிலிருந்து யாழ் செல்கின்ற வாகனங்கள் தற்போது கோப்பாய் வீதி வழியாகச் செல்கின்றன.

சேதமடைந்த பாலம் தற்காலிகமாக, இரும்புத் தண்டவாளங்களால் சீர் செய்யப்பட்டிருப்பதன் காரணமாகவே வாகனங்கள் இவ்வீதி வழியாகச் செல்லக்கூடியதாகவுள்ளது.

### சிறுவருக்கு பால்மா

சாவகச்சேரி,

யாழ் மாவட்ட சர்வோதய இயக்கம் கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் கிளிநொச்சியகதிகளின் சிறுவகளுக்கான பால்மா வகைகளை வாராந்தம் வழங்கச் சம்மதித்துள்ளது.

இவ்வியக்கத்தின் அமைப்பாளர் திரு. கே. கதிரமலை கடந்த வாரம் முகாமிற்கு விஜயம் செய்து கிளிநொச்சி அகதிகள் நிலைபற்றி நேரில் ஆராய்ந்தார்.

முகாமிற்குத் தேவையான பால் மா வகைகளை சர்வோதய இயக்கம் தொடர்ந்து வழங்க அமைப்பாளர் உறுதியளித்துள்ளார். என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கடைசிநேர வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

எனது 632992610 V இலக்கமுடைய துரையப்பா கதிர்காமநாதன் வீரபத்திரர் கோவிலடி மல்லாகம் என்னும் விலாசம் கொண்ட அடையாள அட்டை மருதனுமடத்திற்கும் மல்லாகத்திற்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேலுள்ள விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C 3543)

### கேள்விப் பத்திர அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் 4500 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்குண்டு. 22-7-86க்கு முன்னர் ரூ. 100/- கட்டி விண்ணப்பப் பத்திரம் எடுக்கவும்.

23-7-86 பகல் 1 மணிக்கு முன்னர் கேள்விப் பத்திரம் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்

விண்ணப்பம் அனுப்பும் விலாசம்:-

பொதுமுகாமையாளர்
உடுப்பிட்டி
ப. நோ. கூ. சங்கம்,
வல்வெட்டித்துறை.

[A 942]


### 31-ம் நாள் நினைவஞ்சலி



வைத்திலிங்கம் தர்மலிங்கம்
[உரிமையாளர், லிங்கம் ஸ்ரோர்ஸ், பொலநறுவ)

மலர்வு: 29-03-1950
உதிர்வு: 17-06-1986

அன்பின் திருவுருவே! பண்பின் பிறப்பிடமே! பாசத்துடன் நடந்து பாதியிலே மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

'தர்சினி இல்லம்',
கோண்டாவில் றோட்,
கோப்பாய் தெற்கு.

C-3538


லிடோ
காலை 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ் சரிதா நடித்த
மௌனகீதங்கள்
(கலர் - புதிய பிரதி)

வெலிங்டன்
10-30, 2-30, 4-30, 6-30 P-M
முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.
VENOM
Action - Thrill


## ஊர்காவல் படைகளின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''தமிழ் மக்கள் அனைவரும் சிங்கள அரசின் அடக்குமுறையை எதிர் நோக்கும் தனித் தேசிய இனத்து மக்களே! ஒரே மொழியைப் பேசும் எம் மக்களிடையே பல்வேறுபட்ட சமூக, மத, வர்க்க வேறுபாடுகள் நிலவி வருகின்றன இந்த வேறுபாடுகளைக் கூர்மையடையச் செய்து முரண்பாடுகளைத் தோற்றுவித்து தவறான பிரச்சாரங்களைச் செய்து பசப்பு வார்த்தைகளைக் கூறி சிங்கள அரசு முரண்பாடுகளை விரிசலடையச் செய்கிறது.

''சிறீலங்கா இனவெறி அரசின் இச் சதி வலைக்குள் தமிழ் பேசும் சமூகத்திலிருந்து விடுபட்ட சில அநாகரிகக் கூட்டங்கள் வீழ்ந்து விடுகின்றன. இவ்வாறு வீழ்ந்து விட்ட காடையர் கூட்டங்களே ஊர்காவற்படைகள் எனச் சிங்கள அரசால் அழைக்கப்படுகின்றது.

''யதார்த்த ரீதியில் எம் பழைய பிற்போக்கு தமிழ் தலைமைகளால் தமிழ் முஸ்லிம் மக்களிடையே முரண்பாடான நிலைமை இருந்து வந்தது. இந்த முரண்பாடு சில தீய சக்திகளால் கூர்மையடைய; சிங்கள அரசு தன் சதிவலையை விரித்தது.

''இறுதியிலும் இறுதியாக தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மலையக மக்களை பூறியடித்து கன் நிரந்தர அடிமையாக்க சிங்கள அரசு இம் மூன்று சமூகங்களிடையேயும் இச் சதி வலையைப் பாவிக்கிறது

''தமிழ்பேசும் அனைத்து மக்களும் சரிநிகர் சமானமானவர்களே தான். நாம் எம் உயிரை விட நேசிக்கும் எம் மக்களை எம் உயிரைக் கொடுத்து அரும்பாடுபட்டே காப்பாற்றி வருகிறோம்.

''இந்நிலையில் உயரிய முஸ்லிம் சமூகத்திலிருந்து விடுபட்டஓர் சில இளைஞர்கள் ஊர்காவற்படை என்று கூறிக் கொண்டு எதிரிக்கு துணை போய் தன் இனத்திற்கே ''கோடரிக் காம்பாக'' அமைவது எமக்கு மனவேதனை அளிப்பதோடு அனுமதிக்கப் பட முடியாததாகும்.

''இவ் ஊர்காவற்படையால் தமிழீழ மக்கள் பலர் கொல்லப்பட்டு வருகின்றனர். மானபங்கப்படுத்தப்படுகின்றனர் சொத்துக்கள் சூறையாடப்பட்டு விரட்டியடிக்கப் படுகின்றனர்.

''எம் எதிரிக்கு ஒப்பாக அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கும் இப்பயங்கரவாத செயல்களை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாத சூழ் நிலையே நிலவுகிறது.

''ஓர் கொடிய இன எதிரியால் தினம் தினம் அழிக்கப் படடுவரும் ஓர் சிறிய சனத் தொகையை கொண்ட தமிழ் பேசும் இனத்தை பாதுகாக்க வேண்டிய கடப்பாடு எம் முடையதே.

''ஓர் எதிரி நாட்டைப் போல பாரிய விமானத்தாக்கு தலை நடத்திவரும் சிறீலங்கா அரச கூலிப்படைகளின் துப்பாக்கிகள் அனைத்தும் என்றோ ஒருநாள் தமிழீழ மக்களுக்கு எதிராகவே திரும்பும். எம் இனத்திற்கே கோடரிக் காம்பாய் அமையும் இவ் ஆயுதங்களை கைப்பற்றுவதும் இவ் அமைப்பை சீர்குலைப்பதும் தவிர்க்க முடியாததே. எனவே அனைத்து முஸ்லிம் முற்போக்கு சக்திகளும் எம்முடன் இணைந்து இக் கோடரிக் காம்புகளை களந்தெறிய உதவுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.''

உ

### அந்தியேட்டி அழைப்பும் 31-ம் நாள் நினைவஞ்சலியும்



வ. செல்வரத்தினம்
[துரையர்]

தோற்றம்: 07-05-1910
மறைவு: 18-06-1986
திதி: 18-07-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் அயராது உழைத்து எங்களை வாழவைத்த அன்பின் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
சகோதரர்கள்,
மருமகன்மார்,
மருமகள்மார்,
பேரன்மார்,
பேத்திமார்,
உறவினர்கள்.

பன்னாலை,
தெல்லிப்பளை.

C 3524

### நினைவஞ்சலி



செல்வி
செ. ஜெயலட்சுமி
(திரவியம்)

மலர்வு; 04-03-1962
உதிர்வு: 04-03-1986

வண்ணமலரே
வண்ணமலரே
நீ வாடினையோ
நீ வாடினையோ
பெற்றோர் உற்றோர்
பெருந் துயர் எய்த
உடன்பிறந்தோர்
உள்ளம் வருந்த
நீ பெறாச் செல்வங்கள்
ஏங்கி அழ
நீ வாடினையோ
நீ வாடினையோ
திரவியம் என்னும்
அழகிய மலரே
காலையில் மலர்ந்து
மாலையில் வாடினையோ
உன்தன் பிரிவும்
உன்தன் நினைவும்
உலகம் உள்வரை
நீங்காதே
நின்தன் ஆத்மா
சாந்தி எய்த
இறைபதம்
தொழுவோம்

உன்தன் பிரிவால்
துயருறும்

பெற்றோர்,
சகோதரர்கள்,
மச்சான்மார்,
மச்சாள்மார்,
புறுமக்கள்.

பன்னாலை,
தெல்லிப்பளை.

C 3529

## காகித ஆலை ஊழியருக்கு கமாண்டோக்களினால் ஏற்பட்ட அனுபவம்

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பு - கொழும்பு ரயிலில் அநாதரவாகக் கிடந்த கஞ்சாவை வாழைச்சேனை காகிதாலையில் கடமையாற்றும் ஒருவருக்கு கமாண்டோ படையினர் வலோற்காரமாக வாய்க்குள் திணித்ததால்அவர் மயக்கமடைந்து விழுந்தார்.

இப்பரிதாப சம்பவம் இன்று இடம்பெற்றது.

மட்டக்களப்பிலிருந்து வாழைச்சேனை ஊடாக சென்று கொண்டிருந்த ரயிலில் காகித ஆலை ஊழியர்களும், கமாண்டோ படையினரும் இருந்தனர். அந்த ரயில் பெட்டி ஒன்றுக்குள் அநாதரவாக பிளாஸ்டிக் கலனில் கஞ்சா நிறைய இருந்தது. வந்தாறுமூலை ரயில் நிலையத்தில் கே. சிவபாலன் (40 வயது) என்பவர் ரயிலில் ஏறினார். இவர் காகிதாலையில் வேலைசெய்பவர்.

ஏற்கனவே ரயிலில் இருந்த கஞ்சாவை சிவபாலன் என்பவருடையது என்று வலியுறுத்திய கமாண்டோக்கள் அவரைத் துன்புறுத்தி உண்ணும்படி வாய்க்குள் திணித்தார்களாம் கலனில் உள்ள கஞ்சாவில் அரைப் பங்கை உண்ட அவர் வாழைச்சேனை ரயில் நிலையத்தில் இறங்கி தொழிற்சாலைக்குள் சென்றதும் மயங்கி விழுந்தார். அவர் பின்னர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். [மா]

### 150க்குமேற்பட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளதாக இந்திய வானொலி கூறியது. (சிவ)

### விசாரணைக்கென...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திகதி கணபதிபிள்ளை ஜெயமாலினி (வயது 21) தனது சகோதரியுடன் படுத்திருந்த போது கதவைத் திறக்கும்படி சிங்களத்தில் கூறப்பட்டதாகவும் அவ்வீட்டில் ஆண் உதவி இல்லாததினால் உள்ளே இருந்த இரு சகோதரிகளும் கதவைத்திறக்கவில்லை என்றும் சிறிது நேரத்தில் கதவுஉடைக்கப்பட்டு உள்ளே புகுந்த இராணுவத்தினர் விசாரணைசெய்யவெனக்கூறி ஜெயமாலினியை கூட்டிச்சென்றதாகவும் கூறப பட்டுள்ளது

ஜெயமாலினி திரும்ப வீட டுக்கு வராதபடியால் இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இராணுவத்தினர் அப்படியான பெயருடைய எவரும்முகாமில் இல்லையெனப் பதில் கூறியுள்ளதாகவும் அப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது; (ஐ)

### வசாவிளான்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

படை வீரர்களால் மோட்டார் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் ஏழு இராணுவத்தினர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டனர். சிலர் படுகாயமடைந்தனர். இதனையடுத்து இராணுவத்தினர் முகாமை நோக்கி பின்வாங்கினர். இச்சமரில் மக்கள் விடுதலைப்படை தரப்பில் எதுவித சேதமுமில்லை''.

### யாழ். செயலகம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து கண்டிவீதி வழியாக தேசிய வீடமைப்பு செயலகம் வரை சென்று மீண்டும் செயலக உட்பக்க வாயிலில் குழுமி நின்றனர்.

## சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

கிராமிய கலைக்குழுவினரின் படைப்புக்களான ''சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்'' நாடகமும் ''நங்கள் இணைகிறோம்'' சவிதா நிகழ்வும் இன்று மாலை தாவடி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் அரங்கேற்றப்படவுள்ளன.

இவ்விரு நிகழ்ச்சிகளும் தொடர்ந்து நாளை சனிக்கிழமை மாலை மயிலணி சைவ மகா வித்தியாலயத்திலும், நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் மாலை நல்லூரிலும் மேடையேற்றப் படவுள்ளன

இதேவேளை கிராமிய கலைக் குழுவினரின் பாதுகாப்பு வலய கஷ்டங்களை சித்தரிக்கும் 'அவலங்கள்' என்னும் தெருக்கூத்தும் இப்பகுதியில் பரவலாக நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### மூதூர் ..

[1ம பக்கத் தொடர்ச்சி]

சூட்டிலுனும் பயங்கர ஆயுதங்களின் தாக்குதலினாலும் பலியானதாகும் 200 பேர் வரை காயமடைந்திள்ளதாகவும்அறியப்படுகிறது.

நேற்று முன் தினம் காலை மூதூர்த் தொகுதியிலுள்ள மணல்சேனை, பச்சை நூல், பெருவெளி ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் அகதிகள் முகாமிலிருந்தவர்களையும் வீடுகளிலிருந்தவர்களையும் துப்பாக்கிளால் சுட்டும் வாள் கோடரி போன்ற ஆயுதங்களால் தாக்கியும் அட்டகாசம் செய்தது தெரிந்ததே. (மா)

### பூநகரி...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பயமுறுதியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் இராணுவத்தினர் காட்டுப்பகுதியை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில்வலைபின்னிக்கொண்டிருந்த மத்தியூஸ் அருள் நாயகம் (17 வயது) என்பவர் காயமடைந்தார். இவர் பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பூநகரி பள்ளிக்குடா நாவாந்துறை, பாஷையூர், நவாலி, குருநகர் ஆகிய கிராமங்களிலிருந்து குடும்பமாகச் சென்ற மீனவர்கள் காலாதிகாலமாக மீன்பிடித் தொழில் செய்து வருகிறார்கள். இங்கு கடல் அட்டை பிடிப்பதே பிரதான தொழில். சளங்கட்டியும் மீன் பிடிக்கிறார்கள்.

நேற்றுக்காலை இடம்பெற்ற சம்பவத்தையிட்டு அத்தனை மீனவர்களும் தங்கள் உடமைகளையெல்லாம் கைவிட்டு, படகுகள் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

பூநகரி 4ம் கட்டையிலுள்ள இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவத்தினர் மீனவர்களை நோக்கி வெள்ளிக்கிழமை காலை மீண்டும் வருவதாகப் பயமுறுத்தியதைத் தொடர்ந்து அக் குடும்பங்கள் அச்சமடைந்து வெளியேறியதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ. மா)

## கதம்பவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

புழ்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் நாளை (சனிக்கிழமை ''கதம்பவிழா'' நடைபெறவுள்ளது.

இக்கதம்ப விழாவில் கோப்பாய் வட்டாரக்கல்வி மூலவள நிலைய நாட்டிய சங்கீத நிகழ்ச்சிகளும் ''தமிழரின் தாகம்'' என்னும் வில்லுப் பாட்டும் இடம் பெறுகின்றன. (மா)

## கொப்ரு தேவை

வாங்குபவர்:

ச. சேதுகாவலர்,

47, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(வள்ளுவர் சிலையடி) (A 790)



## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ கனடா

நேரடியான உடனடிப் பிரயாணம்

நாளுக்கு நாள் பயணமாகிக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

குவைற்

டிரைவர் [Driver] பணிப்பெண்

சவுதி அரேபியா

கிளினேர்ஸ்

உடனடி பிரயாண ஒழுங்கு செய்துகொடுக்கப்படும். அத்துடன் பாஸ்போட், பொன்ட், விசா, ரிக்கட்டிங் என்பனவும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

Group Atlantic Travels
163, HOSPITAL, ROAD,
JAFFNA. (A797)



## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க்,
★ கனடா
(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

உடனடியாக எமது காரியாலயத்தில் பதிவுசெய்துகொள்ளவும்.

★ சவுதி அரேபியா
கிளினேஸ்க்கு பிரயாண ஒழுங்குகள் 20 நாட்களுக்குள் செய்து கொடுக்கப்படும்.

(i) வைத்தியசாலை
(ii) விமான நிலையம்
(iii) தொலைத் தொடர்புத் திணைக்களம்

மற்றும்:-
★ லிபியா ★ குவைற்
★ டுபாய் ஆகிய நாடுகளுக்கும்
உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

அத்துடன்
பாஸ்போட், பொண்ட், விஸா, ரிக்கற்றிங் என்பன உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:—

யூனிவேர்சல் ஏஜென்சிஸ்,
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(பெற்றோலியம் கூட்டுத்தாபன முன்பாக, ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமை.)
(A 796)


## 'பயன் பாடு நிறைந்த கல்விக் கண்காட்சி'

அச்சுவேலி, வியாழன்

கல்விப் பொருட்காட்சியில் காலத்திற்கேற்ற பயன் பாடுகள் பல காட்சிக்கு வைக்கப்பட்ட வைபவம் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. தற்போதைய சூழ் நிலைகளால் பாதிப்படைந்துள்ள மக்களுக்கு பலதுறைகளிலும் உதவக்கூடிய வகையில் இக் கண்காட்சி அமைந்திருந்தது

தண்ணீரில் இருந்து ஒட்டு வேலைகளுக்குப் பாவிக்கக்கூடிய ஒட்சிசன், ஐதரசன், வைத்தியத்துறைக்குத் தேவையான ஒட்சிசன், ஆகியவை தயாரிக்கும்முறை மரவள்ளிக்கிழங்கு, கள்ளு. கரும்பு ஆகியவற்றில் இருந்து வாகனங்களுக்கான எரிபொருள் தயாரிக்கும் முறை, சாணத்திலிருந்து உயிரியல்வாயுவைத் தயாரித்து இடத்துக்கு இடம் எடுத்துச் சென்று பாவிக்கும் முறை ஆகியன பார்வையாளரைப் பெரிதும் கவர்ந்தது.

இக் கல்விக் கண்காட்சியை கல்லூரி அபிவிருத்திச்சபைச் செயலாளரும் முன்னை யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவருமான திரு ஆ ந இராசேந்திரன் மங்கள விளக்கேற்றி வைக்க கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஆ வ. தங்கராசாவினால் திறந்து வைக்கப்பட்டது.

சங்கானையில்

## விவசாய அபிவிருத்திக் கருத்தரங்கு

வட்டுக்கோட்டை, வியாழன்

சங்கானை பொதுநூல் நிலையமண்டபத்தில் எதிர்வரும் புதன்கிழமை காலை 9மணிக்கு திரு பொ. செல்வரத்தினம் தலைமையில் விவசாய அபிவிருத்திக்கருத்தரங்கு'' யாழ். அபிவிருத்திச்சபை மின்சார சபை அத்தியட்சர் திரு பொ ஜெயரட்ணசிங்கம் அவர்களின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் சுழிபுரம்ரட்ணம்ஸ் எலெற்றிக்கல்ஸ் குறூ பின்ஆதரவில் இக் கருத்தரங்கு நடைபெறும்

யாழ் கமநலசேவைகள் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு க. பரமலிங்கம் விவசாய இலாகா உதவிப்பணியாளர் திரு. சு. கிருஷ்ணபிள்ளை, சிவதர்ம வள்ளல் திரு க. கனகராஜா யாழ் மருத்துவபீட விரிவுரையாளர் திரு டி குணராசசிங்கம் பேராசிரியர். திரு கா சதாசிவம்பிள்ளை, யாழ் பயிர்க்காப்புறுதிப் பணிப்பாளர் திரு சு சிவகுரு, பெரும்பாக உத்தியோகத்தர்கள் திரு. பி. சூசைப்பிள்ளை, திரு. குழந்தைவேல், விவசாயப் போதனாசிரியர் திரு. ச தம்பிராஜா ஆகியோர் உரையாற்றுவார்கள்.

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்திரு ஜீ சிதம்பரநாதர் விவசாயிகளின் தேவைகளையும் கஷ்டங்களையும்தொகுத்து அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டுவருவார்.

மறுமலர்ச்சிமன்றச் பொது செயலாளர் திரு. செ. யோ. செல்வராஜா மேற்படி கருத்தரங்கு ஒழுங்குகளைக் கவனித்து வருகின்றார்.

மேற்படி கருத்தரங்கில் கால்நடைப் பராமரிப்பு விதை தானியம் உரம் கிருமிநாசினி ஆதியாம் பல்வேறு துறைகளில் எழும் பிரச்னைகளுக்கு விளக்கங்கள் அளிக்கப்படும்,

சங்கானை சிவப்பிரகாசமகா வித்தியாலய வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மாணவர்களின் விவசாய கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். ஐ

## 150 ஆண்டு நிறைவுவிழா நினைவாக உயர் வகுப்புகளுக்கான நிதியம் ஆரம்பம்

உடுவில், வியாழன்

மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலையின் 150 வது வருட நிறைவு விழாவை ஞாபகப்படுத்தும் முகமாக யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர் சுந்தரலிங்கம் உயர்வகுப்பு நிதியம் ஒன்றை ஆரம்பித்து வைத்தார்.

இதன் ஆரம்ப நிதியாக ரூபா 500 ஐ கல்விப்பணிப்பாளர், மெமோறியல் ஆங்கில பாடசாலை அதிபர் திரு. வி. பொன்னுத்துரையிடம் கையளித்தார்.

சர்வகலாசாலைக்கு இப் பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு இப்பணம் புலமைப்பரிசில் நிதியாக வழங்கப்படும்.

கல்விப்பணிப்பாளர் ஆரம்பித்து வைத்த இந்நிதியத்துக்கு பழைய மாணவர், ஆசிரியர்கள், பெற்றோர் ஒத்துழைப்பு வழங்கி மேலும் நிதி சேகரித்து நிலையான வைப்பில் இட்டு அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை பல்கலைக்கழகம் செல்வோருக்கு வழங்க வேண்டும் என்றும் கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டார்.

கிளிநொச்சி

## உ. அ. அ. கண்டாவளையில் தற்காலிகமாக இயங்கும்

கிளிநொச்சி வியாழன்

கிளிநொச்சி சம்பவங்களை அடுத்து இயங்கமுடியாது ஸ்தம்பித நிலையை அடைந்த இராணுவ, பொலிஸ் கூட்டு முகாமிற்கு அருகில் உள்ள கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனை பொதுமக்களது அன்றாட அலுவல்களை கவனிக்கும் முகமாக உத்தியோகப்பற்றற்ற முறையில் கண்டாவளை வெளிகண்டல் சந்தியில் உள்ள சுற்றுலா உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

இங்கு கடந்த ஒருமாதமாக குவிந்துகிடந்த வேலைகள் நிர்வாக அதிகாரியும் காணி அதிகாரியுமான திரு. வேலுப்பிள்ளை தலைமையில் துரித கெதியில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இதேவேளை இராணுவ முகாம் வளவில் உள்ள வட பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம் பளையில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நெல்சந்தைப் படுத்தும்சபை பரந்தனில் உள்ள இச்சபைக்கு சொந்தமான மற்றுமோர் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது. கிளிநொச்சி நீர்ப்பாசனப்பணிமனை பரந்தனில் இயங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## ஆலயங்கள் புனிதமான இடமாக இருக்க வேண்டும்

யாழ்ப்பாணம், வெள்ளி

''ஆலயங்கள் புனிதமான இடங்களாக இருக்க வேண்டுமே தவிர சாந்தி பெற வேண்டி வழிபடும் அடியார்களுக்கு இடையூறு தரும் இடமாக அமையக்கூடாது'' என்று கொக்குவில் மேற்கு மணியர்பதி ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பேசிய திரு இ. அன்னலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி ஆலயத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் சி. இ. அன்னலிங்கம், உப தலைவர் இ ஜெகநாதன் இணைச் செயலாளர்கள் பொ. முத்துக்குமாரு, மு. வ. சுப்பிரமணியம், உபசெயலாளர் பா. தியாகராசா, பொருளாளர் சி அன்னலிங்கம், உப பொருளாளர் சு. க. குமராசா, கணக்குப் பரிசோதகர் இ. சச்சிதானந்தம். மற்றும் 12 பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (து)

## ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்களுக்கு பிரியாவிடை

சுழிபுரம், வியாழன்

வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளில் அதிபர்களாகக் கடமையாற்றி இவ்வாண்டு ஓய்வு பெற்ற ஐந்து பேர்களுககு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப. சண்முகராசா தலைமையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் இவ்வைபவம் நடைபெற்றது

இளைப்பாறிய அதிபர்கள் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் திரு சி. விசுவலிங்கம், சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை திரு. ச. சிதம்பரப்பிள்ளை. சாந்தை சிற்றம்பல வித்தியாசாலை திரு இ குமாரசாமி, வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு திரு. எஸ். வேல்முருகு சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை திரு. எஸ். விருத்தாசலம். ஆகியோர்களாவர். இவர்கள் சேவையைக் கௌரவித்து பலர் பாராட்டுரை வழங்கினர். நி

## சங்காபிசேகம்

வட்டுக்கோட்டை, வெள்ளி

வட்டுக்கோட்டை சங்கரத்தை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இன்று விசேடசங்காபிசேகம் (1 008) நடைபெறும்

இன்று நவசக்தி அர்ச்சனையும், மாகேஸ்வர பூசையும் நடைபெறும்.

## பதில் தலைவர் பொறுப்பேற்றார்

புலோலி வியாழன்

பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் பதில் தலைவராக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட தொழில் நுட்பவியல் அதிகாரியும் இலங்கை விஞ்ஞான முன்னேற்ற அறிவியல் பரப்புச்சங்க யாழ் கிளைச் செயலாளருமான திரு. எஸ். தேவதாஸன் பொறுப்பேற்றுள்ளார்.

பேராதனை பல்கலைக்கழக புள்ளி விபரவியல் பட்டதாரியான திரு. தேவதாஸன் பருத்தித்துறை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய தர்மகர்த்தா சபை நிர்வாகச் செயலாளராகவும் பணியாற்றிவருகின்றார்.

## ஆயிரத்தில் ஒருவர்



யாழ் மத்திய கல்லூரியின் இடைநிலைப் பொறுப்பாளராகப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குமேல் பணியாற்றிய லெப்ரினன்ட் கேர்ணல் கே. பாலேந்திரா தமது ஐம்பத்தைந்தாவது வயதுல் ஓய்வு பெற்றமை கல்வியுலகிற்கும் குறிப்பாக யாழ் மத்திய கல்லூரிக்கும் பெரும் இழப்பென்றால் அதுமிகையல்ல சுமார் 600க்கு மேற்பட்ட இடைநிலை பிரிவு மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் நிர்வாக அலுவல்களை மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் கவனித்துக் கொண்டு ஆங்கிலத்தையும் கணிதத்தையும் விருப்புடன் கற்பித்தார் அவர்.

மகரகமவில் பயிற்சிபெற்ற பாலேந்திரா மொத்தமாக 35 ஆண்டுகள் ஆசிரியப்பணியாற்றியிருக்கின்றார். பாத்தளை செ ன். தோமஸ் கல்லூரியில் படிப்பித்த காலத்தில் இராணுவ சேவையால் கவரப்பட்டு தொண்டர் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றி விரைவில் லெப்டினன்ட் கேர்ணல் என்ற உயர்பதவிக்கு உயர்த்தப்பட்டார். பல சந்தர்ப்பங்களில் இராணுவ சேவைக்கு அழைக்கப்பட்ட பாலேந்திரா 1971ல் நடைபெற்ற செகுவாரா கிளர்ச்சியின்போது குருநாகல் மாவட்டத்தில் சில இராணுவப் பிரிவுகளுக்குப் பொறுப்பாக விருந்து சிறந்த பணியாற்றினர்.

இராணுவத்தில் பெற்ற உயர்பதவியின் காரணமாக மாத்தளை சென் தோமஸ் கல்லூரியிலும் யாழ் மத்திய கல்லூரியிலும் 'கடேற்' அணிகளுக்குப் பொறுப்பாகவிருந்து அவை உயர்வடைய வழி வகுந்தார். மத்திய கல்லூரியின் பான்ட் வாத்தியக் குழுவின் இயக்குநராகவுமிருந்து சிறந்த பணியாற்றினர்.

இன்றைய நரவேட்டை இராணுவம் போலல்லாத அன்றைய இராணுவத்தில் பணியாற்றிப் பெற்ற ஒழுக்கக் கட்டுப்பாடுகளின் பயனாய் விளைந்த நற்பண்புகளே அவரின் தன்னடக்கம் பொறுப்புணர்ச்சி சிறந்த ஆளுமையினடியாகப்பிறந்த படாடோபமற்ற நிர்வாகம் தன்னலமற்றசேவை புகழ் விரும்பாத பெருந்தன்மை எல்லாம் எனலாம். பதவி உயர்ச்சியெதையும் குறிவைத்து வேலைசெய்யாமல் சேவையைச் சேவையாகவே செய்து பெருமை பெற்றவர், புன்சிரிப்பு ஒன்றாலேயே ஆசிரியர்களையும் மாணவர்களையும் அவரவர் கடமைக்கு வழிநடத்தி அனைவரினதும் நன்மதிப்பைப் பெற்றவர்,

இத்தனை சிறப்பியல்புகள் வாய்ந்த லெப்டினன்ட் கேர்ணல் பாலேந்திரா மற்றொரு முன்மாதிரியையும் நமக்குச் செய்துகாட்டியிருப்பது மிகவும் பாராட்டுக்குரியது, தன்னைக் கௌரவிக்கும் பொருட்டு எந்தவித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்யக் கூடாதென்றும் அதற்காக ஆசிரியர்களிடமிருந்தோ மாணவர்களிடமிருந்தோ எவ்வித நிதியும் திரட்டக் கூடாதென்றும் அவர் கண்டிப்பாக அறிவித்துள்ளார்,

நாம் செய்த சேவைக்குத்தான் வேதனம் பெற்றோமே பின் எதற்குத்தான் பாராட்டும் பணமுடிப்பும்? என்று கேட்கும் பாலேந்திரா உண்மையில் ஆயிரத்தில் ஒருவர் தான் என்பதில் சந்தேகமேயில்லை!

என். கே. ரகுநாதன்

## அரச அதிபரை சந்தித்தனர்

வல்வெட்டித்துறை, வியாழன்

வல்வெட்டித்துறையில் இராணுவம் சுட்டதில் பலியான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இராசா [60 வயது] மற்றும் காயமடைந்த கம்பர் மலையைச்சேர்ந்த சி. சந்திரவதனம் [36 வயது], வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இ. வைத்திலிங்கம் (80 வயது) ஆகியோர் பற்றியும் ஏனைய சேதங்கள்பற்றியும் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்ட வல்வை பிரஜைகள்குழுவின் தலைவர் திரு கே. ஈ. திருநாவுக்கரசு மற்றும் செயலாளர்கள் சகிதம் நேற்று யாழ், அரச அதிபரை சந்தித்தனர்.

அன்று நடந்த சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகளை வழங்கும்படியும் கேட்டுக்கொண்டனர்.

## முதலிடம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கோப்பாய் கல்விவட்டார ரீதியில் புத்தூர்சோமஸ்கந்தக் கல்லூரியில் நடைபெற்ற இசை, நடன, நாடகப்போட்டியில் நீர்வேலி சீ.சி. தமிழ் கலவன் பாடசாலை முதலிடத்தை பெற்றுள்ளது.

[சிவ]

## அராலி இந்து வெற்றி

அராலி, வியாழன்

யாழ். மாவட்ட அரசாங்கப் பாடசாலைகளுக் கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 15 வயதின்கீழ்ப் பிரிவில் அராலி இந்துக் கல்லூரி காரை டாக்டர் தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தை 3-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து வெற்றியீட்டியது.

அராலி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு.க. நாகஜெயக்குமாரன் நடுவராக கடமையாற்றினர். இச்சுற்றுப்போட்டியில் முன்னர்அளவெட்டி அருணோதயாக் கல்லூரியையும் அராலி இந்து வென்றது குறிப்பிடத்தக்கது.

## மந்திகை வைத்தியசாலைக்கு அன்பளிப்பு

புலோலி, வியாழன்

வணக்கத்திற்குரிய ஆனலட் அடிகளாரின் முயற்சியைத் தொடர்ந்து சாவகச்சேரி வைமன்கழகம், மந்திகைஅரசினர் வைத்தியசாலைக்கு பண்டேஜ், பிளாஸ்ரர், துணிகள் போன்றவற்றை அன்பளிப்புச் செய்துள்ளது. மேலும் பண்டேஜ், பிளாஸ்ரர், துணிகள் உபகரணங்களை வைத்திய சாலைக்கு அன்பளிப்புச் செய்யும் என கழகம் வைத்திய சாலை நிர்வாகத்திற்கு உறுதியளித்துள்ளது.

வணக்கத்திற்குரிய ஆனல்ட் அடிகளார் அண்மையில் மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு வருகைதந்திருந்தார். அப்போது வைத்திய சாலைக்கு வரும் நோயாளிகள் வைத்தியசாலையில் பண்டேஜ், பிளாஸ்ரர, துணிகள், உபகரணங்கள் இல்லாமையினால் பெரும் கஷ்டமடைந்ததைக் கண்டு நோயாளிகளின் நன்மை கருதி சாவகச்சேரி வைமன்கழகத் தலைவர் திரு ஏ ஆர். ரகுவுடன் தொடர்பு கொண்டமையினாலேயேவைத்தியசாலைக்கு பண்டேஜ், பிளாஸ்ரர், துணிகள் ஆகியன கிடைத்தன. இப்பொருட்கள் மந்திகை அரசினர் வைத்திய சாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம் கணேசநாதனிடம் கையளிக்கப்பட்டது.

## இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி- 2(1986-07-18)
கிழமை- வெள்ளி
திதி- துவாதசி பி.இ. வரை
நட்சத்திரம்- அனுசம் காலை 8.29ன் மேல் கேட்டை

மேடம்: ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானமாக இருக்கவும். தூரதேசவாசம் துயரத்தில் ஆழ்த்தும். விபத்துக்கும் இடமேற்படலாம்.

இடபம்: குடும்பத்தில் குதூகலம் தென்படும். காதலர் வாழ்வில் கற்கண்டானதினம். உறவினர்களின் ஆதரவும் பெற்றோரின் ஆசியுமுண்டு.

மிதுனம்: எதிர்பாராத மூலையிலிருந்து ஆபத்து உருவாகும். உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றும் இயந்திரங்களுடன் பழகுபவர்கள் எச்சரிகைவேண்டும்.

கடகம்: பொதுப்பணிகளில் ஈடுபடுவீர்கள். அந்தஸ்திலும் முன்னேற்றமுண்டு பரம் பொருளின் அருளும் கிடைக்கும்,

சிங்கம்: தொழில்துறையில் சிறப்புக்கிடமுண்டு புதிய கண்டுபிடிப்புக்ளும் இடம் பெறலாம். பொறியியலாளர்களுக்கும் சிறப்பான தினம்.

கன்னி: மெத்தவும்பொருள் சேரும். மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும். தித்திக்கும் செய்தியுடன் தேனுன வாழ்வுமுண்டு.

துலாம்: முன்னேற்றம் தடைப்படும். குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தும். உடல் நலத்தைப் பேணவும்.

விருச்சிகம்: வெளியிடத்துத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும் வருவாய் சம்பந்தமான கவலை அதிகரிக்கும். தேகநலமும் குன்றும்.

தனுசு: இலட்சியவாதிகளுக்கு இன்றுசிறப்பான தினம். உரிமைகளைப பெறுவதில்புதிய பாதை தென்படும். முதியவரின் உபதேசம் முன்னேற்றத்தையளிக்கும்.

மகரம்: எதிர்பார்த்த தனவரவு தடைப்படும். சிலருக்குக் கடன் தொல்லையும் அதிகரிக்கும் சகோதரவழிச் சஞ்சலமும் உண்டு.

கும்பம்: அன்னை வழி ஆதரவும் உண்டு. அறிஞர்களின் தொடர்புடன் பரம்பொருளின் அருளும்உண்டு.

மீனம்: அறவழியில் நாட்டம் செல்லும். தாராள மனப்பான்மை மூலம் பணம் செலவாகும். இளைய பிள்ளையால் மகிழ்ச்சியுண்டு

திருமலை ரவீந்திரன்

## கைதடி நவீல்ட் மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 19ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதமவிருந்தினராக வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் கலந்துகொள்வார்.

[சிவ]

## விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம் வெள்ளி

யாழ். மடம்வீதி திருவள்ளுவர் சனசமூகநிலைய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில மென்பந்து கிரிக்கெட் உதைபந்தாட்டம், கரம், டாம் ஆகிய விளையாட்டுக்களை நடத்தவுள்ளது. (ஐ)

## கிரிக்கட் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் இடையில் 17 வயதுக்குட்பட்டோர் பிரிவிலான கிரிக்கட் போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியினர் 7 விக்கட் நஷ்டத்துக்கு254 ஓட்டங்களைப் பெற்றனர்.

கொக்குவில் இந்துக்கல்லூரி சார்பில் செல்வன் நற்குணேந்திரன் 63 ஓட்டங்களையும் செல்வன் குகராஜா 32 ஓட்டங்களையும், செல்வன் பேரின்பநாதன் 34 ஓட்டங்களையும் விஸ்வநாதன் 24 ஓட்டங்களையும் பி. பிரகலாதன் ஆட்டம் இழக்காது 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

யூனியன் கல்லூரி 3 விக்கட் நஷ்டத்துக்கு 84 ஓட்டங்களைப் பெற்றது. [வி]

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் சட்டநாதர் ஆலய வழிபடுவோர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபொழுது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பெற்றனர்

தலைவர்: வ. பரமசிவம் உபதலைவர்கள்: ஆ. சு செல்வரத்தினம், சி. ஜெயபதி செயலாளர் பொ. கி. மார்க்கண்டு உபசெயலாளர்: இ சந்திரகுமார் பொருளாளர்: அ. வாமதேவன் உப பொருளாளர், வீ. யோகரத்தினம்.


# பவர்ஸ் உரம்

## அதிக விளைச்சலுக்கும் கூடிய இலாபத்துக்கும்

ரூபா 2,000/- க்கும் மேல

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
5, மேல் சத்தம்ஸ் வீதி,
கொழும்பு-1.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 18-7-86

# 'மாகாணசபை திட்டம் எம்மை அழிப்பதற்கான நடவடிக்கை'

## மாணவர் அவை அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

"எமது தாயகம் பொதுப் பிரதேசம் என்பதனை அங்கிகரிக்காத தீர்வு எம்மை காலப்போக்கில் முழுமையாக அழிப்பதற்கே துணைபோகும். இந்த வகையில் தற்போதைய மாகாணசபைத் திட்டம் எம்மை அழிப்பதற்கான நடவடிக்கைகளில் ஒன்றேயாகும்."

யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. யாருக்காக இந்த தீர்வு! என்ற தலைப்பில் வெளியான அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

"யூ. என். பி அரசின் ஜனாதிபதி திரு ஜெயவர்த்தன இனப் பிரச்னைக்குத தீர்வு ஆக தற்போதைய மாகாண சபைத் திட்டத்தை முன்வைத்த போது அமெரிக்க ஜனாதிபதி றீகன் இதனை சிறந்த தீர்வு என்று பாராட்டிக் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்தர். அமெரிக்க வானொலி இத் தீர்வுக்கு சாதகமான உலக அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதற்கான பிரசாரத்தை முடுக்கி விட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதியினால் புகழப்பட்டதும் அமெரிக்கவானொலியினால் பிரசாரப்படுத்தப்படுவதுமான இம் மாகாண சபைத்திட்டம் உண்மையில் அமெரிக்காவினதும் அரசினதும் நலன்களைப் பேணுவதற்கான ஓர் நடவடிக்கையே யாகும். இலங்கையின் இனப் பிரச்னையில் ஓர் நெருக்கடி நிலையிலுள்ள இந்திய ஆட்சியாளர்கள் நெருக்கடி நிலையை தற்காலிகமாகத் தணிப்பதற்காக இத்திட்டத்தை அடிப்படையாககொண்ட ஓர் தீர்வை ஏற்றுக்கொள்ளுமாறு எம்மவர்களை நிர்ப்பந்திக்கின்றனர். இச்சந்தர்ப்பத்தினை நழுவ விட்டால் தமது அரசியலுக்கு எவ்வித வாய்ப்புமே கிடைக்காது என்ற நிலையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இத்தீர்வினூடாக தமது நலன்களை அடைந்து கொள்வதற்காக தீர்வு மார்க்கம் குறித்து பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளனர்.

"எமது பிரச்னைக்கான தீர்வு என்பது மொத்த தமிழ்பேசும் மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டே நிர்ணயிக்கப் படவேண்டும். தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனத்தவர்கள் அவர்களுக்கென்று பொதுப் பிரதேசமுண்டு இது மறுக்கப்பட்டு வடக்கு கிழக்கு என இரு பிரிவாக எமது பிரதேசம் பிரிவுறும் போது தமிழ் பேசும் மக்களின் தேசிய ஒருங்கிணைப்பு சிதறடிக்கப்படுகிறது. தமிழ் பேசும் மக்களின் தேசிய ஒருங்கிணைப்பு சிதறடிக்கப் படுவதனூடாக நாம் தேசிய இனம் எனும் தகமையினை காலப்போககில் இழந்து விடுவதுடன் எம்மை முழுமையாக அழிப்பதற்கு வழி கோலியவர்களாவோம்.

"தேசிய ஒடுக்குமுறைக்குஎதிராக சகலவர்க்கத்தினரும் இணைந்து மேற்கொள்ளும் தேசிய விடுதலைப் போராட்டமானது ஒரு கட்டத்தில் மேல் தட்டு மக்கள் சிலரின் நலன் கருதி சமரசத்தினை நோக்கி திசை திருப்பபட்டுவது வரலாற்று உண்மையாகும். இத்தகைய சமரசங்களினால் மேல் தட்டினர் நலன்களை அடைந்து கொள்வர். போராட்டத்தின் தீவிரத்தைத் தணித்து நாம் தப்பிப் பிழைப்பதற்காக ஆளும் வர்க்கத்தினர் இவ் விட்டுக் கொடுப்புகளைச் செய்வர். இதன் வெளிப்பாடே இன்றையமாகாணசபைத் திட்டமாகும். தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது நலன்கள் கருதி சமரசத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசு போராட்டத்தை அழிப்பதற்காக சில விட்டுக் கொடுப்புகளைச் செய்ய முன் வந்துள்ளது. ஆனால் மொத்த தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் நோக்கும் போது இத் திட்டம் பிரச்னைகள் எதனையும் தீர்க்கப்போவதில்லை.

"இவற்றினூடாக இம் மாகாணசபைத் திட்டமானது ஏகாதிபத்தியத்தினதும், சிங்கள மக்களினதும் நலன்களைப் பேணுவதாயும் இந்திய ஆளும் வர்க்கத்தினரின் நெருக்கடியினை தணிப்பதனையும் அரசியலில் எவ்வித பிடியுமில்லாமல் தத்தளிக்கும் கூட்டணியினருக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதனையுமே நோக்காகக் கொண்டது. தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகள் எதுவுமே இதனூடாகத் தீர்க்கப் படப் போவதில்லை. மாறாகத் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கான சரி நடவடிக்கையே இதுவாகும். எனவே இத்திட்டத்தை தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒன்று கூடி நிராகரிக்கப்போம்"

## தப்பிய இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், வெள்ளி.

அடம்பனில் இராணுவம் சுட்டதில் காயமடைந்த நெடுங்கண்டலைச் சேர்ந்த தர்மலிங்கம் - அழகேஸ்வரி [வயது 19] யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றும் அடம்பனைச் சேர்ந்த இம்மானுவல் [வயது 52] சூட்டுக்காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ஐ)

## ஜஹர்ப்பூரி திங்கள் வருவார்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் இந்திய மீனவரான திரு கணபதியை நேரில் சந்திக்கவும் அவரை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைக்காகவும், இந்திய தூதரக முதலாவது செயலாளர் திரு. ஜஹர்ப்பூரி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார். (ஐ)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் (அப்பர்)

சிவபாக்கியம் தேவகிருஷ்ணு. பன்னாலை, தெல்லிப் பழை (கொழும்பு, யாழ். பலகலைக்கழக முன்னாள் லிகிதர்) மேற்கு ஜெர்மனியில் காலமானார். இவர் தேவ கிருஷ்ணு (கொழும்பு பெரியாஸ்பத்திரி) அவர்களின் அன்பு மனைவியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-07-86 அன்று மேற்குஜெர்மனியில் நடைபெற்றது.

அப்பர் சோதிநாகரத்தினம்,
அப்பர் இல்லம், பன்னாலை.

(C 3536)

### திருமதி லில்லிமலர் தருமரத்தினம்

திருமதி லில்லிமலர் தருமரத்தினம் 16-07-86ல் லண்டனில் காலமானார். இவர் திரு. S. D. தருமரத்தினம் (இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்-தற்போதைய கணக்காளர், கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி பிறிம் சேவியர் (U. K.), பொபி ரவீந்திரன் (அவுஸ்திரேலியா , யோசப் தருமரட்னம் ஆகியோரின் அன்பு தாயாரும், பீலிக்ஸ் சேவியர் (U.K.), ரவீந்திரன் (அவுஸ்திரேலியா), சாந்தி தருமரட்னம் (U. K.), ஆகியோரின் மாமியாரும், திருமதி நறுமலர் நவரட்னம் (இந்தியா), எட்வேட் (மாதகல்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் நல்லடக்கம் லண்டனில் நடைபெறும். தகவல்:

தருமரத்தினம் குடும்பத்தினர்,
சண்டிலிப்பாய்.

(C 3542)

### திருமதி யோகம்மா சுப்பிரமணியம் சாவகச்சேரி

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த திருமதி யோகம்மா சுப்பிரமணியம் - ஆசிரியை (சாவகச்சேரி இந்துக் கல்லூரி 17-07-86ல் காலமானார். அன்னார் ஓய்வுபெற்ற அதிபர் அல்லாரை அரசினர் பாடசாலை - திரு. வ. சுப்பிரமணியத்தின் மனைவியும், Dr திருமதி சீதாலட்சுமி முருகேஸ்வரன் U K , Dr. விஜயலட்சுமி யாழ் வைத்தியசாலை, Dr. குகதாசன் யாழ். வைத்தியசாலை, சிவதாசன் U K ஜெயலட்சுமி வேம்படி மகளிர் கல்லூரி, சண்முகதாசன் St. Johns College ஆகியோரின் அன்புத் தாயாரும், தப்பையா முருகேஸ்வரனின் [U.K.] மாமியாருமாவார்.

பரமேஸ்வரி சம்பந்தபிள்ளை - ஆசிரியை, அன்னலட்சுமி நாகராசா - ஆசிரியை, டிறிபேக் கல்லூரி, இராசாத்தி சிவானந்தம், தவமணி விவேகானந்தன் [யாழ். தேசிய சேமிப்பு வங்கி], Dr. குணசிங்கம் - U K., Dr. பாலசிங்கம் - U K. வே. பொன்னம்பலம் [தேசிய வீடமைப்புத் திணைக்களம்], வே. லங்காதேவி [யாழ். செயலகம்] ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-07-86 மாலை 4-30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றது என்பதனை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவையாற்றுத
கணவனும், குடும்பத்தினரும்

[C 3544]

## 'மக்கள் விடுதலைப் படை' மீட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி

"திருநெல்வேலியில் வைத்துத் திருடப்பட்ட சைக்கிள்களும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது" என்று 'மக்கள் 'விடுதலைப் படை'யினர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"திருநெல்வேலியில் வைத்து திருடப்பட்ட சைக்கிள்களும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் மக்கள் விடுதலைப் படையால் மீட்கப்பட்டு யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் விடுதலைப் படை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. ஒரு மோட்டார்சைக்கிளும் (சி.50) 3 ஏசியா சைக்கிளும் உள்ளன இவற்றைப் பறி கொடுத்தவர்கள் உரிய ஆதாரம் காட்டி பெற்றுச்செல்லலாம்.

## ஐந்து குழுக்களின் ஆலோசனைகள் இன்றைய மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

அரசியல்கட்சி மாநாட்டின் ஐந்து கட்சிகளினது உப குழுக்களின் ஆலோசனைகள் இன்று காலை டண்டார நாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ள மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதிகாரப் பரவலாக்கல், மகாணசபைகள், காணிக் குடியேற்றம், சட்டமும் ஒழுங்கும், மாநாட்டின்'பீ' குழுவின் அறிக்கையை ஆராய்தலும் நடைமுறைப் படுத்தலும் என்பன பற்றி ஆராய்வதற்கே இந்த 5 குழுக்களும் கடந்த செவ்வாய்க்கிழமை நியமிக்கப் பட்டிருந்தன.

இன்றைய பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து ஜனாதிபதி த.வி கூட்டணி பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளார் நேற்று பிற்பகல் த.வி கூட்டணிப் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ஒரு மணி நேரம் பேச்சு நடத்தினு. (சிவ)

## வர்த்தக சங்கம் அரச அதிபரை சந்தித்தது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். வர்த்தக சங்கத்தினர் நேற்று யாழ். அரசாங்க அதிபர் எம். பஞ்சலிங்கத்தை சந்தித்து லொறி போக்குவரத்து, பொருட்கள் விலை அதிகரிப்பு பிரச்னை சம்பந்தமாக ஆராய்ந்தனர்.

வர்த்தக சங்க குழுவில் சங்கத்தலைவர் திரு. கே ஏ நடராசா, செயலாளர் திரு எஸ் நமசிவாயம், சங்க உறுப்பினர்கள் திரு வி கனகலிங்கம், திரு. விஜயரத்தினம் ஜனப். எம். ரசீக் ஆகியோர் சென்றிருந்தனர்.

அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளித்தனர்.

## 100க்கு மேற்பட்ட இளைஞர்கள் பூஸாவுக்கு

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடிப்பகுதிகளில் கைது செய்யப்பட்ட 100 க்கு மேற்பட்ட இளைஞர்கள் பூஸா முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## கண்ணி வெடிக்கு 3 இளைஞர் பலி

மட்டக்களப்பு, வியாழன்

ஏருவூர் புன்னைக்குடா வீதியில் இடம்பெற்ற கண்ணி வெடி விபத்தில் 3 இளைஞர்கள் லியானார்கள்.

நேற்று முன் தினம் மாலை இச் சம்பவம் இடம்பெற்றது.

எஸ். உத்திராங்கன் (21 வயது), எஸ். நாகேந்திரன், (21 வயது), பி. ஜே. வியேந்திரன் (27 வயது) ஆகியோரே பலியானவர்களாவர். (மா)

## பருத்தித்துறையில் 'ஷெல்' தாக்குதலில் சிறுமி பலி குழந்தை உட்பட மூவர் காயம்

புலோலி, வியா.

பருத்தித்துறையில் இராணுவத்தினரால் ஏவப்பட்ட மோட்டார் ஷெல் தாக்குதல்களிற்கு சிறுமியொருத்தி பலியானார் மேலும் அதே வீட்டைச்சேர்ந்த் 6மாதக் குழந்தையுட்பட மூவர் படுகாயங்களுக்குள்ளாகினர். நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

செல்வி, றெசிதா அமிர்தநாதன் [வயது 3] என்ற சிறுமியே பலியானவராவர். மார்க்கு அன்னம்மா [வயது 70] அமிர்தநாதன் செபமாலைநாயகி [வயது 25] அமிர்தநாதன் றெசில்தா [வயது 3மாதம்] ஆகிய மூவருமே காயங்களுக்குள்ளாகி பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டவர்களாவர். இதில் மார்க்கு அன்னம்மாயாழ்அரசினர்வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளார்,

இதற்கிடையில் நேற்று தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களின்போது காயப்பட்ட உடுவில் கிழக்கு சுன்னாகத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பொன்னம்மா [65வயது]வும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

## ஹெலி, ஷெல் தாக்குதல்

வசாவிளான், வியாழன்

இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினருக்கும், மக்கள படையினருக்கும் இடையே இடம் பெற்ற மோதலை தொடர்ந்து குரும்பசிட்டி, கட்டுவன், குப்பிளான் பகுதிகளில் ஹெலிகொப்டர்தாக்குதலும், ஷெல் தாக்குதலும் இடம்பெற்றன.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.